| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர்.சி.உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், |

ந.க.எண். 025847 /NTSE/2020 நாள் :16 .12.2020

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தேசிய திறனாய்வுத் தேர்வு டிசம்பர் 2020 – தேர்வு நடத்துதல் தொடர்பாக முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.647, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM.IV) துறை, நாள்.16.11.2020 .
2. அரசாணை (நிலை) எண்.438, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM.IV) துறை, நாள்.24.08.2020 .

-----

பார்வை 1 மற்றும் 2–இல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் (Standard operating procedures) பின்பற்றி, 27.12.2020 –ல் நடைபெறவுள்ள தேசிய திறனாய்வுத் தேர்வு நடத்துதல் தொடர்பாக பின்வருமாறு வழங்கப்படும் அறிவுரைகளை தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கும் தெரிவித்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தேசிய திறனாய்வுத் தேர்வு நடத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள்

1. தேசிய திறனாய்வுத் தேர்வு நடத்துதல் சார்ந்து வெளியிடப்பட்டுள்ள பார்வையில் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி தேர்வு தொடர்பான பணிகள் அனைத்தும் நடைபெறுதல் வேண்டும். அவ்வரசாணையின் நகல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.
2. முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்தில் அமைந்துள்ள தேர்வு மையங்களுக்கேற்ப ஏற்கனவே உள்ள நடைமுறையினைப் பின்பற்றி தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / துறை அலுவலர்கள் / வழித்தட அலுவலர்கள் / வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் / அறைக் கண்காணிப்பாளர்களை நியமனம் செய்தல் வேண்டும்.
3. பார்வை 1 மற்றும் 2–இல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி தேசிய திறனாய்வுத் தேர்வு நடத்துதல் தொடர்பான அறிவுரைகளை, வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் / வழித்தட அலுவலர்கள் / தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / துறை அலுவலர்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழங்குதல் வேண்டும்.

4. தேசிய திறனாய்வுத் தேர்வுக்கென அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையங்களில் **400 சதுர அடி கொண்ட ஒரு தேர்வறையில் 10 என்ற** எண்ணிக்கையில் தேர்வர்களை சமூக இடைவெளியோடு அமர வைக்க வேண்டும்.

**தேர்வுகள் துவங்குவதற்கு முன்பு தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மேற்கொள்ளவேண்டிய பணிகள்**

- அனைத்து தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்களும், தங்கள் மையத்திற்கு நியமனம் செய்யப்பட்ட துறை அலுவலர், எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளருடன் சேர்ந்து, தேர்வு துவங்குவதற்கு முன்பு தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வு மையத்தை பார்வையிட்டு, இருக்கை வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் இருப்பதையும், அங்கு விடைத்தாள்கள் மற்றும் வினாத்தாள்களை பாதுகாப்பாக வைப்பதற்கு போதிய இரும்பு அலமாரிகள் இருப்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர், பெயர் பட்டியலினை தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள **User ID** மற்றும் **Password**–ஐ பயன்படுத்தி அரசுத் தேர்வுத் துறை அறிவிக்கும் நாட்களில் இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும்.

**தேர்வு மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

i. தேர்வு மையங்களில் **400 சதுர அடி கொண்ட ஒரு தேர்வறையில் 10 என்ற** எண்ணிக்கையில் தேர்வர்களை சமூக இடைவெளியோடு அமர வைக்க வேண்டும்.

ii. தேர்வு நாளன்று நுழைவு வாயிலில் கூட்டம் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு கண்டிப்பாக சமூக இடைவெளிக்கான நெறிமுறைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

iii. தேர்வறைக்குள் அனுமதிக்கும் நேரம் வரை, தேர்வர்கள் சமூக இடைவெளியுடன் அமர்ந்து தேர்வுக்கு தயாராவதற்கு ஏதுவாக முதன்மைக் கண்காணிப்பாளர் போதுமான எண்ணிக்கையில் காத்திருப்பு அறைகளை (Waiting rooms) அமைத்தல் வேண்டும்.

iv. தேர்வர்கள் காத்திருக்கும் அறைக்கு வெளியே இருப்பதற்கு அனுமதித்தல் கூடாது.

v. தேர்வு மைய வளாகத்தில் மூன்று இடங்களில் தேர்வு நடைபெறக்கூடிய தேர்வறைகளின் வரைப்படத்தினை (Seating Plan) ஒட்டுதல் வேண்டும்.

vi. தேர்வு மையத்திற்கு அருகில் உணவுப் பொருட்களை விற்பனை செய்பவர் எவரும் இல்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்வேண்டும்.

vii. தனிமைப் படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள தேர்வர்களை தேர்வு மையத்தில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்ட தனி அறையில் அமர வைத்து தேர்வெழுத நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

**viii. தேர்வு துவங்குவதற்கு முன்பு, தேர்வு மையங்களில் உள்ள தேர்வறைகள் மற்றும் தேர்வுப் பணி நடைப்பெறும் அறைகளில் உள்ள மேசை, நாற்காலி, கதவு, ஜன்னல் ஆகியவற்றில் கிருமிநாசினி தெளிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

**ix. தேர்வு மையத்தில் கை கழுவுவதற்கு சோப்பு மற்றும் தண்ணீர் வசதி ஏற்பாடு செய்தல் வேண்டும்.**

**x. தேர்வுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், பணியாளர்கள், தேர்வர்கள் அனைவரையும் அவர்களது கைகளை சோப்பு / Hand Sanitizers கொண்டு சுத்தம் செய்த பின்னரே தேர்வறைக்குள் அனுமதிக்க வேண்டும். அதற்கேற்ப தேர்வு மையத்தில் நுழைவாயில் மற்றும் வெளியேறும் வழி ஆகியவற்றில் சோப்பு மற்றும் கை கழுவுவதற்கு தகுந்த ஏற்பாடு செய்தல் வேண்டும்.**

**xi. அறைக் கண்காணிப்பாளர்கள் விடைத்தாட்கள் (OMR SHEETS) மற்றும் வினாத்தாட்களை ஆகியவற்றை எடுத்து தேர்வர்களுக்கு வழங்குவதற்கு முன்பு கண்டிப்பாக கைகளை சுத்தம் செய்தல் வேண்டும்.**

xii. தேர்வு நடைபெறும் நாட்களில் தேர்வு மையத்திற்கு வருகை புரியும் பணியாளர்கள் / ஆசிரியர்கள் / தேர்வர்கள் அனைவருக்கும் தேர்வு மையத்திற்குள் நுழையும் போது Thermal scanner கொண்டு உடல் வெப்ப பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும்.

xiii. உடல் வெப்ப பரிசோதனை தொடர்பாக அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் அனைத்தும் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

xiv. தேர்வு மையத்திற்குள் ஆசிரியர்கள் / பணியாளர்கள்/ தேர்வர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்திருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

xv. தேர்வுப் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தங்களுடைய ஆரோக்கியம் குறித்த சுய உறுதிமொழியினை தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

xvi. தேர்வு மையத்தில் அறைக் கண்காணிப்பாளர்களுக்கு கூட்டம் நடத்துதல், தேர்விற்கு முன்னர் அறைக் கண்காணிப்பாளர்களுக்கு வினாத்தாட்கள் மற்றும் விடைத்தாட்களை வழங்குதல் மற்றும் தேர்வு முடிவடைந்த பின் அறைக் கண்காணிப்பாளர்களிடமிருந்து விடைத்தாட்களை பெறுதல் போன்ற பணிகளின் போது கண்டிப்பாக சமூக இடைவெளி பின்பற்றப்படுதல் வேண்டும்.

**xvii. தேர்வு மையத்திற்கு முகக் கவசம் அணியாமல் வரும் தேர்வர்களுக்கு முகக் கவசம் வழங்குதல் வேண்டும். அதற்கு ஏதுவாக, தேர்வு மையங்களில் கூடுதலாக முகக்கவசங்களை வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.**

xviii. தேர்வர்கள் கையுறை அணிந்து தேர்வெழுத விரும்பினால், அதற்கு அனுமதி வழங்கலாம்.

xix. தேர்வர்கள் தங்களுடன் கைக்கிருமி நாசினி (Hand Sanitizer) எடுத்து வந்திருந்தால், அதனை தேர்வறைக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

xx. தேர்வர்கள் தங்களுடன் தண்ணீர் பாட்டில் (Transparent Water Bottle only) எடுத்து வந்திருந்தால், அதனை தேர்வறைக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

xxi. ஒவ்வொரு தேர்வு மையத்தின் அருகே உள்ள மருத்துவமனைகளின் பட்டியலும் முதன்மைக் கண்காணிப்பாளரிடம் இருத்தல் வேண்டும்.

xxii. பணியாளர்கள் / ஆசிரியர்கள் / தேர்வர்கள் அனைவரும் தேவையின்றி தேர்வு மைய வளாகத்திற்குள் கூட்டம் கூடுதல் கூடாது என அறிவுறுத்துதல் வேண்டும்.

xxiii. தேர்வு மைய வளாகத்திற்குள் தேர்வுப் பணி தொடர்பில்லாத நபர்களை அனுமதித்தல் கூடாது.

xxiv. தேர்வு முடிவடைந்த பின்பு தேர்வர்களை போதிய இடைவெளியுடன் தேர்வு மையத்தை விட்டு அனுப்பி வைக்கும் பணியினை, துறை அலுவலர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

xxv. தேர்வர்களை தேர்வு மையத்திற்கு அழைத்து வரும் / அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் தேர்வு மையத்திற்கு வெளியே காத்திருக்கும் போது முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும் எனவும், சமூக இடைவெளியினைப் பின்பற்ற வேண்டும் எனவும்,அறிவுறுத்தல் வேண்டும்.

**மேலும், பார்வை 1 மற்றும் 2–இல் காணும்அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகள் தேர்வு மையத்தில் கண்டிப்பாக பின்பற்றப்படுதல் வேண்டும்.**

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்ட அனைத்து அறிவுரைகளையும் பின்பற்றி நடைபெறவுள்ள தேசிய திறனாய்வுத் தேர்வினை எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் சிறப்பாக நடத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காக